ஸ்ரீரங்கம் ஸ்ரீ வரசித்தி ஆஞ்சனேயர் கோயிலில் மகா சம்ப்ரோக்ஷணம்

ஸ்ரீரங்கம், ஆக. 20: ஸ்ரீரங்கம் தெற்கு சித்திரை வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ வரசித்தி ஆஞ்சனேயர் கோயிலில் மகா சம்ப்ரோக்ஷணம் புதன்கிழமை நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

ஸ்ரீரங்கம் தெற்கு சித்திரை வீதியில் அமைந்துள்ள ஸ்ரீவரசித்தி ஆஞ்சனேயர் கோயிலில் புதன்கிழமை நடைபெற்ற மகா சம்ப்ரோக்ஷணம்.

முன்னதாக, கடந்த 17-ஆம் தேதி மாலை மங்களஹாரத்தி, முதல் கால பூஜையுடன் விழா தொடங்கியது.

தொடர்ந்து 18-ஆம் தேதி காலை 8 மணிக்கு இரண்டாம்கால பூஜையும், மாலை 6 மணிக்கு மூன்றாம் கால பூஜையும் நடைபெற்றது. விழாவில் மகா சம்ப்ரோக்ஷணம் நாளான புதன்கிழமை காலை 7 மணிக்கு விஸ்வரூபம் தரிசனம் மற்றும் கோ பூஜையை தொடர்ந்து 8 மணிக்கு நான்காம் கால பூஜை நடைபெற்றது. அதன் பின்னர் யாக சாலையிலிருந்து கடங்கள் புறப்பட்டு, கோயில் விமானத்துக்கு மங்களவாத்தியத்துடன் எடுத்து செல்லப்பட்டு, காலை 9.15 மணிக்கு மேல் 10 மணிக்குள் புனித நீர் ஊற்றி மகா சம்ப்ரோக்ஷணம் செய்யப்பட்டது.

இதை ஸ்ரீரங்கம் கோயில் மிராசு அர்ச்சகர் நரசிம்ம பட்டர், மகாதேவன், மதுசூதனன் ஆகியோர் செய்தனர். அப்போது, திரளான பக்தர்கள் பக்தி கோஷங்களுடன் வழிபட்டனர்.

பின்னர் சாற்று முறையும், மஹா நைவேத்யமும், மங்களஹாரத்தியும் நடைபெற்றது. வியாழக்கிழமை முதல் அக்டோபர் 6-ஆம் தேதி வரை நாள்தோறும் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது.

விழா ஏற்பாடுகளை கோயில் விழாக் கமிட்டியினர் செய்து வருகின்றனர்.

சமயபுரம் மாரியம்மன் கோயிலுக்குள் கைப்பேசிகள் எடுத்து செல்ல செப்.1 முதல் தடை

மண்ணச்சநல்லூர், ஆக. 20: சமயபுரம் மாரியம்மன் கோயிலுக்கு வரும் பக்தர்கள் செப்.1-ஆம் தேதி முதல் கோயிலுக்குள் கைப்பேசிகள் எடுத்துச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பக்தர்கள் தங்கள் கைப்பேசிகளை பாதுகாப்பாக வைத்து செல்ல ஏதுவாக, திருக்கோயில் வரிசை வளாகம் - கிழக்கு, திருக்கோயில் வரிசை வளாகம் மேற்கு, திருக்கோயில் தெற்கு தேரோடும் வீதி, திருக்கோயில் மேற்கு தேரோடும் வீதி ஆகிய நான்கு இடங்களில் கைப்பேசி பாதுகாப்பு பெட்டக மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த இடங்களில் பக்தர்கள் தங்கள் கைப்பேசிகளை ரூ. 5 கட்டணமாக செலுத்தி அங்கு ஒப்படைத்துவிட்டு டோக்கன் பெற்றுக் கொள்ளலாம். தரிசனம் செய்துவிட்டு வெளியே வந்தவுடன் டோக்கனை காண்பித்து கைப்பேசிகளை பெற்று கொள்ளலாம். தடையுத்தரவை மீறி கோயிலுக்குள் மறைமுகமாக எடுத்துச் செல்லும் கைப்பேசிகள் பறிமுதல் செய்யப்பட்டு, காவல்துறையின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனகோயில் இணை ஆணையர் எம். சூரியநாராயணன் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

CSB Bank Trusted Heritage Smart Future

அடமானம் வைக்கப்பட்ட தங்க நகைகளை ஏலம் விடுவது குறித்த பொது அறிவிப்பு

பின்வரும் கடன் பெற்றவர்கள், வங்கிக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைச் செலுத்துமாறு வங்கி அறிவிப்பு மற்றும் கோரிக்கை / ஏல அறிவிப்புகள் அனுப்பியும் அவர்கள் அலுவலர் தெரிந்தாரு வாரண்டினை, அவர்கள் பெற்ற கடனுக்காக வங்கியில் அடமானம் வைக்கப்பட்ட தங்க நகைகள் பொது ஏலத்தில் விற்கப்படும் என்பதைக் குறிப்பாக கடன் பெற்றவர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் அறியும்பொல்லாக்களுக்கும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த ஏலம் 15, செப்டம்பர் 2026 அன்று காலை 10.30 மணிக்கு கம்ப்யூட்டட் லிங்க் ஏலாத்தில், "உள்ளபடியே" மற்றும் "இருப்பது போல் உள்ளது இன்றி" என்ற அடிப்படையில் நடைபெறும். வங்கியின் அறிவிப்பு பலகையில் வெளியிடுவதன் மூலம், வங்கியின் விற்பனைக்கேற்ப ஏலம் வேறு ஒரு தேதிக்கு ஒதுக்கிவைக்கப்படலாம். பொது ஏலம் அல்லது E-ஏலம் (e-auction) மூலம் தங்க நகைகள் விற்கப்படும் என்பதையும், ஏலம் நெற்றிப்படையாக மட்டத்தில் அல்லது ஏலத்திற்குப் பிறகும் வங்கிக்குச் சேர வேண்டிய நிலுவைத் தொகை எதேனும் இருந்தால், அந்தத் தொகையை வருவிக்கக் கடன் பெற்றவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம். "கடன் பெற்றவர் இரத்துவிட்ட நிலையில், அனைத்து நிபந்தனைகளும் அமலாக்கப்படும் வரிகளாரர்களுக்குப் பொருந்தும்"

வ.எ. எண்	ஏல எமயம் CSB கிளை	கணக்கு பெயர்	வாடிக்கையாளர் அடையாள எண்	கணக்கு எண்ணின் கிளை	17.08.2026 அன்றுள்ளபடி வரவேண்டிய நிலுவைத்தொகை	எடை (கிராம்கள்)
1	அரூர்	பாஸ்கர் S	04002468	001	1,35,632.92	17.00
2	திருச்சிராப்பள்ளி	சந்திரன் வெள்ளைசாமி	07884301	001	4,13,723.68	42.00
3	திருச்சிராப்பள்ளி	பேபிகா செல்லையா பேபி	03932825	006	29,86,023.29	279.60
4	திருச்சிராப்பள்ளி	வாசுமதி R	10196841	002	25,88,308.39	226.30
5	அம்மாபாளையம்	ஆனந்தன்	10112672	002	7,96,649.19	72.72
6	அம்மாபாளையம்	கரிகாலன் புனியாண்டி	10210928	001	6,28,336.25	63.90
7	தஞ்சாவூர்	G விஜயராஜா	03382169	001	6,78,046.16	71.20
8	தஞ்சாவூர்	கோர்க்கர் ரமேஷ்கிருஷ்ணன்	05037420	001	79,858.64	8.70
9	தஞ்சாவூர்	ரேவதி நெல்காரஜ்	08337082	003	8,74,233.98	85.80
10	கும்பகோணம்	முருகன் கலியன்	08179351	001	9,39,771.12	97.30
11	கும்பகோணம்	பிரதாப் சிங் பால்ராஜ்	07570310	001	5,36,071.36	47.00
12	சத்திரம்-திருச்சி	குணசுந்தரி ரவிகிருஷ்ணன்	10248037	002	53,92,669.04	476.90
13	சத்திரம்-திருச்சி	P ஆர்த்தினி	08228477	001	6,23,462.57	55.20
14	பெரம்பலூர்	ஜானகி	10209626	001	1,98,808.44	20.50
15	பெரம்பலூர்	பொன்னுசாமி	07546524	001	2,03,629.38	23.00
16	பெரம்பலூர்	சிவசுதா மணிகம்பிள்ளை	07442628	002	20,45,726.90	231.20
17	பெரம்பலூர்	வீரமணி R	10211377	002	2,58,428.61	24.10
18	துறையூர்	சண்முகம் P	10210473	002	5,98,469.27	59.80
19	துறையூர்	தீபன்ராஜ் A	10052098	002	29,34,133.86	263.40
20	புதுக்கோட்டை	அஜித்குமார் R	10206926	001	1,52,748.04	15.50
21	புதுக்கோட்டை	பாண்டிராஜ்.	10001753	002	4,18,329.89	43.10
22	புதுக்கோட்டை	பார்வதி ராமச்சந்திரன்	10160853	001	22,76,453.62	234.00
23	புதுக்கோட்டை	சதுர்வேதியன் R	10140681	001	26,83,305.13	226.75
24	புதுக்கோட்டை	சரஸ்வதி கதிரவன்	10202044	002	4,64,704.03	47.20
25	புதுக்கோட்டை	சிவநேசன் புனியாண்டி	08358441	001	1,53,293.36	16.00
26	வையூர் சாலை-திருச்சி	சந்தானபாண்டியன் செந்தில்வேல்	08321998	007	26,67,838.57	289.00

மேலும் விவரங்கள் / கணக்குகள் குறித்த தகவல்கள் பெறவும், ஏலத்தில் கலந்து கொள்ளவும் கடன் பெற்றவர்கள் / ஆர்வமுள்ள வாரர்கள் அந்தந்தக் கிளைகளைத் தொடர்பு கொள்ளவும்.

தமிழ்நாடு | 21.08.2026 ஒம்/- அதிகாரமுள்ள அலுவலர், CSB வங்கி

பழைய ஓய்வூதியம் கோரி 'டிட்டோ-ஜாக்' ஆர்ப்பாட்டம்

திருச்சி/முசிறி, ஆக. 20: தமிழ்நாடு தொடக்கக் கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு (டிட்டோ-ஜாக்) சார்பில், திருச்சியில் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழகம் முழுவதும் 20 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் ஒருபகுதியாக, திருச்சி உறையூர் வட்டார கல்வி அலுவலகம் அருகே டிட்டோ-ஜாக் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு மாநகர ஒருங்கிணைப்பாளர் பெர்ஜித் ராஜன் தலைமை வகித்தார்.

பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும், ஆசிரியர்களின் பணி பாதுகாப்பை உறுதி செய்திடவேண்டும், ஆசிரியர் தகுதி தேர்வை ரத்து செய்திட பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். பெண் ஆசிரியர்களின் நலனை பாதிக்கக்கூடிய அரசாணை 243-ஐ ரத்து செய்திட வேண்டும். இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு இடையேயான ஊதிய முரண்பாட்டை நீக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருச்சி உறையூரிலுள்ள வட்டார கல்வி அலுவலகம் அருகே வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழக தொடக்கக் கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழுவினர்.

மேலும், மக்கள்தொகை கணக்கெடுப்பில் ஈடுபட்டுள்ள 55 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு உள்ள சிரமத்தை கருத்தில் கொண்டு அவர்களுக்கு அப்பணியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினர். இந்த ஆர்ப்பாட்டத்தில், 100-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

முசிறியில்: முசிறியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு டிட்டோ ஜாக் வட்டாரத் தலைவர் கண்ணன் தலைமை வகித்தார். வட்டார ஒருங்கிணைப்பாளர் சம்சுதீன், மாநில துணை பொதுச் செயலாளர் நாகராஜன், செயலாளர் குமாரலிங்கம் உள்ளிட்ட பலர் பங்கேற்று பேசினர்.

காலமுறை ஊதியம் வழங்கக் கோரி கிராம உதவியாளர்கள் ஆர்ப்பாட்டம்

திருச்சி, ஆக. 20: காலமுறை ஊதியம் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, திருச்சியில் தமிழ்நாடு வருவாய்த் துறை கிராம உதவியாளர்கள் சங்கத்தினர் வியாழக்கிழமை கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருச்சி மாவட்ட ஆட்சியரகம் அருகே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு சங்கத்தின் மாவட்ட செயலர் சத்யா தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் நடராஜ் வரவேற்றார். மாவட்ட துணை நிலை நிர்வாகிகள் மதியழகன், சிவகலை, சுபத்ரா, வசந்தி, ஜமுனா, ரெங்கசாமி, சிவசங்கர், செல்லதுரை, செல்வா, செல்வகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு வருவாய்த் துறை கிராம உதவியாளர் சங்க மாநில செயலர் எஸ். கார்த்திக், கோரிக்கைகளை விளக்கி பேசினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலர் வளன்அரசு, ஜிபிஎஸ் ஒழிப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் இன்பராஜ், மோட்டார் வாகன பராமரிப்பு துறை அலுவலர் சங்க நிர்வாகி அன்புரோஸ், தமிழ்நாடு சுகாதார ஆய்வாளர்கள் சங்க பொருளாளர் கண்ணதாசன் உள்ளிட்டோர் வாழ்த்தி பேசினர்.

கிராம உதவியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட காலமுறை ஊதியமான அடிப்படை ஊதியம் ரூ.15 ஆயிரத்து 700 வழங்க வேண்டும். 1-4-2003-க்கு பின்னர் பணி நியமனம் செய்யப்பட்ட கிராம உதவியாளர்களுக்கு சிபிஎஸ், டி.ஏபி.எஸ் திட்டத்தில் ஓய்வூதியம் கிடைத்திட தனி அரசாணை வெளியிட வேண்டும். கிராம உதவியாளர்கள் காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும் உள்ளிட்ட 6 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில், சங்க நிர்வாகிகள், கிராம உதவியாளர்கள் என 100-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

வெளிநாட்டு வேலை: இளைஞரிடம் ரூ.7.78 லட்சம் மோசடி

திருச்சி, ஆக. 20: வெளிநாட்டில் வேலை வாங்கித் தருவதாக தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞரிடம் ரூ. 7.78 லட்சம் மோசடி செய்தது தொடர்பாக ஏஜென்சி உரிமையாளர் மீது போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் புதூர் வடக்கு முத்தையாபுரம் பகுதியைச் சேர்ந்தவர் ரங்கராஜ் (36). இவர் வெளிநாடு வேலைக்கு முயற்சி செய்து வந்தார். இந்த நிலையில் திருச்சி கேகே. நகரில் உள்ள ஒரு தனியார் ஏஜென்சி நிறுவனம் வெளிநாடுகளுக்கு வேலைக்கு ஆள்கள் அனுப்புவதாக அறிந்து இங்கு வந்துள்ளார்.

பின்னர், அந்த நிறுவனத்தின் உரிமையாளர் சுபேஷ் நாராயணன் கொடுத்த நம்பிக்கையின் அடிப்படையில் வெளிநாடு செல்வதற்காக ரங்கராஜ் மற்றும் அவரது நண்பர்கள் மாதவராஜ், மாரியப்பன் ஆகியோர் ரூ.7,78,500 பணத்தை கடந்த பிப்ரவரி மாதத்தில் கொடுத்தனர். ஆனால், வெளிநாடு செல்ல சுபேஷ் நாராயணன் எந்த ஏற்பாடும் செய்யவில்லையாம்.

ஏமாற்றப்பட்டதை உணர்ந்து கொண்ட ரங்கராஜ், சுபேஷ் நாராயணனிடம் கொடுத்த பணத்தை திரும்ப கேட்டார். ஆனால், அவர் பணத்தை கொடுக்காமல் இழுத்தடித்து வந்தார். அதைத் தொடர்ந்து ரங்கராஜ் கேகே. நகர் காவல் நிலையத்தில் புதன்கிழமை புகார் அளித்தார். இதன்பேரில், சுபேஷ் நாராயணன் மீது போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி பிறந்த தினம்

திருச்சி/ மணப்பாறை, ஆக. 20: திருச்சியில் மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் பிறந்த தினத்தை காங்கிரஸ் கட்சியினர் வியாழக்கிழமை கொண்டாடினர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மாநிலப் பொதுச் செயலர் எம். சரவணன் தலைமையில், திருச்சி சந்திப்பு ரயில் நிலையம் அருகேயுள்ள ராஜீவ் காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், மாநில பேச்சாளர் சிவாஜி சண்முகம், முன்னாள் கோட்டத் தலைவர்கள் ஆனந்தராஜ், சம்சுதீன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

இதேபோல, திருச்சி மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் சார்பில், மாவட்ட பொருளாளர் முரளி தலைமையில், ராஜீவ்காந்தியின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் மாவட்ட நிர்வாகிகள் சத்தியநாதன், பட்டேல், செந்தமிழ்செல்வன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு வேதாரண்யம் உப்பு சத்தியாகிரக இயக்கத்தின் சார்பில், நாச்சிகுறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்ற நிகழ்வில், ராஜீவ்காந்தியின் உருவப் படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

திருச்சி சந்திப்பு ரயில் நிலையம் அருகே உள்ள ராஜீவ் காந்தி உருவச் சிலைக்கு வியாழக்கிழமை மாலை அணிவித்து மரியாதை செலுத்திய காங்கிரஸ் கட்சியினர்

இயக்கத்தின் மாவட்ட பொதுச் செயலர் தர்மராஜ் மற்றும் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் ரமேஷ், சிவராஜ், முருகானந்தம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மணப்பாறையில்: மணப்பாறையில், திருச்சி தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி, மணப்பாறை பேரவை காங்கிரஸ் கமிட்டி சார்பில், நகரத் தலைவர் என்.முருகேசன் தலைமையில் ராஜீவ்காந்தி பிறந்த நாள் கொண்டாடப்பட்டது.

இதில், பொத்தமேட்டுப்பட்டியில் உள்ள ஜவாஹர்லால் நேரு சிலை, திருச்சி சாலை மற்றும் காந்தி நகரில் உள்ள மகாத்மா காந்தியடிகள் சிலை, கோவில்பட்டி சாலையில் உள்ள காமராஜர் சிலை ஆகியவற்றுக்கு மலர் மாலை அணிவித்து காங்கிரஸார் மரியாதை செலுத்தினர். காமராஜர் சிலை பகுதியில் வைக்கப்பட்டிருந்த ராஜீவ்காந்தி உருவப் படத்துக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்வில் வட்டாரத் தலைவர்கள் சத்தியசீலன், மாவட்ட பொருளாளர் கணபதி, மாவட்டச் செயலாளர்கள் வீரபாண்டியன், வழக்குரைஞர்கள் கலைராஜ், ஜான்போஸ்கோ உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

வீட்டில் தனியாக இருந்த மூதாட்டியிடமிருந்து 23 பவுன் தங்க நகைகள் திருட்டு

முசிறி, ஆக. 20: திருச்சி மாவட்டம், தொட்டியம் அருகே தனியாக வசித்து வந்த மூதாட்டி வீட்டில் புகுந்து 23 பவுன் தங்க நகைகள் இருந்த பையை திருடி சென்ற நபரை போலீஸார் தேடி வருகின்றனர்.

தொட்டியம் அருகிலுள்ள கல்லுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் சீலம்மாள் (70). இவரது கணவர் 2 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். குழந்தைகள் இல்லாத இவர் ஆடு மேய்த்துக் கொண்டு வீட்டில் தனியாக வசித்து வருகிறார்.

இந்நிலையில், சீலம்மாள் வீட்டில் தனியாக புதன்கிழமை தனியாக இருந்தபோது, வீட்டுக்குள் புகுந்த அடையாளம் தெரியாத மர்ம நபர் ஒருவர், வீட்டின் விட்டத்தில் மாட்டி வைக்கப்பட்டிருந்த மஞ்சள் பையை திடீரென எடுத்து கொண்டு தப்பியோடி விட்டார்.

மூதாட்டி கூச்சலிட்டதை தொடர்ந்து அக்கம்பக்கத்தினர் அங்கு விரைந்து வந்து விசாரித்தனர். மர்ம நபர் எடுத்து சென்ற பையில் 23 பவுன் தங்க நகைகள் மற்றும் 1 கைப்பேசி இருந்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்து சீலம்மாள் தொட்டியம் காவல் நிலையத்தில் வியாழக்கிழமை அளித்த புகாரின் பேரில், போலீஸார் வழக்குப் பதிந்து நகையை திருடிச் சென்ற மர்ம நபரை தேடி வருகின்றனர்.

பிடாரி மதுரகாளியம்மன் கோயில் திருத்தேர் வீதியுலா

முசிறி, ஆக. 20: திருச்சி மாவட்டம், காட்டுப்புத்தூரிலுள்ள ஸ்ரீ பிடாரி மதுரகாளியம்மன் கோயில் திருத்தேர் திருவீதியுலா வியாழக்கிழமை நடைபெற்றது.

இதையொட்டி, அலங்கரிக்கப்பட்ட திருத்தேரில் அம்மனை வைத்து கோயிலிலிருந்து பக்தர்கள் தங்கள் தோள்களிலும், தலையிலும் தூக்கிச் சுமந்து முக்கிய வீதிகள் வழியாக பக்தி கோஷங்கள் முழங்க ஊர்வலமாக எடுத்துச் சென்றனர்.

அப்போது வழிநெடுகிலும் பக்தர்கள் திரண்டு பூஜை செய்து அம்மனை வழிபட்டனர். 60 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெறும் திருவிழா என்பதால் காட்டுப்புத்தூர் பகுதி முழுவதும் விழாக்கோலமாக காட்சியளித்தது.

NOTICE / NAME CHANGE

I, **MOORTHY, S/o. Late. Marudaiah**, residing at **No.66/45, Muthaliyar Street, Woraiyur, Tiruchirappalli - 620003, Tamilnadu, India**, do hereby solemnly affirm and state as follows:

1. I am the deponent herein I am residing in the above said address.
2. My father's correct name is **L.MARUDAIAH** the same has been mentioned in my father's death certificate.
3. But my father's name has been wrongly mentioned in my Passport as **MARUTHAIAH**.
4. Now I hereby swear and confirm that my father's name **L.MARUDAIAH** and **MARUTHAIAH** both names are referred to my father's name alone one and the same person and referring to my father's name only and nobody else.

MOORTHY

வியாபாரி வீட்டின் பூட்டை உடைத்து ரூ. 15 லட்சம் ரொக்கம், 5 பவுன் தங்க நகைகள் திருட்டு

முசிறி, ஆக. 20: திருச்சி மாவட்டம், முசிறி அருகே வியாழக்கிழமை பட்டப்பகலில் வெங்காயவியாபாரியின் வீட்டின் பூட்டை உடைத்து ரூ. 15 லட்சம் ரொக்கம், 5 பவுன் தங்க நகைகளை திருடி சென்ற நபர்களை போலீஸார் தேடி வருகின்றனர்.

முசிறி அருகே சீவம்பட்டியை சேர்ந்த சின்னையன் மகன் மனோகரன் (55). இவர், முசிறி உழவர் சந்தையில் வெங்காய வியாபாரம் செய்து வருகிறார். வழக்கம்போல் வியாழக்கிழமை காலை வீட்டை பூட்டிவிட்டு சந்தைக்கு மனோகரனும், அவரது மனைவி சென்றனர். வியாபாரத்தை முடித்துவிட்டு மதியம் வீட்டுக்கு வந்தபோது வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது.

வீட்டினுள் பீரோவில் இருந்த ரூ. 15 லட்சம் ரொக்கம், 5 பவுன் தங்க நகைகள் திருடப்பட்டிருந்தது தெரியவந்தது.

இதுகுறித்த புகாரின்பேரில், முசிறி போலீஸார் நிகழ்விடத்துக்கு வந்து பார்வையிட்டு ஆய்வு செய்தனர். தொடர்ந்து, வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

மின் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

திருச்சி, ஆக. 20: ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு மின்வாரியமே நேரடியாக ஊதியம் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி திருச்சியில் வியாழக்கிழமை மின் ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு (சிஐடியு) சார்பில், மன்னார்புரத்திலுள்ள மின்வாரிய அலுவலகம் முன் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு, வட்டத் தலைவர் பி. நடராஜன் தலைமை வகித்தார். சிஐடியு மாநில துணைத் தலைவர் எஸ். ரங்கராஜன் ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்

ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு தினக் கூலியை மின்வாரியமே நேரடியாக வழங்க வேண்டும். மின்வாரியத்தில் 1998-ஆம் ஆண்டுக்குப் பிறகு இன்று வரை ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் தொழிலாளர்கள் அனைவரையும் நிரந்தரப்படுத்த வேண்டும். அனைத்து வகை ஒப்பந்த தொழிலாளர்களுக்கும் மருத்துவக் காப்பீடு, சீருடை, விபத்து காப்பீடு, இன்சூரன்ஸ், பணிக்கொடை, இஎஸ்ஐ உள்ளிட்ட சலுகைகளை வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில், மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில, மாவட்ட நிர்வாகிகள், சிஐடியு நிர்வாகிகள், மின்வாரிய ஒப்பந்தத் தொழிலாளர்கள் என 100-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆர்ப்பாட்டம்

திருச்சி தில்லைநகரில் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியினர்.

திருச்சி, ஆக.20: போக்குவரத்துக் கழகத்தில் காலியாக உள்ள நடத்துநர் பணியிடங்களை நிரப்ப வட மாநிலத்தைச் சேர்ந்த நிறுவனத்துக்கு ஒப்பந்தம் அளித்திருப்பதை ரத்து செய்ய வலியுறுத்தி, திருச்சியில் ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியினர் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருச்சி தில்லைநகர் 7-ஆவது தெருவில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி பொறுப்பாளர் செந்தில் தலைமை வகித்தார்.

மக்கள் கலை இலக்கியக் கழக மாநில ஒருங்கிணைப்பாளர் ஜீவா, ஆட்டோ ஓட்டுநர்கள் பாதுகாப்பு சங்கத்தின் தலைவர் முத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் பல்லாயிரக்கணக்கான காலிப் பணியிடங்கள் உள்ள நிலையில், அவற்றை நிரந்தரமாக நிரப்பாமல் வடமாநில நிறுவனத்துக்கு ஒப்பந்தம் வழங்குவதை கண்டித்து முழக்கமிட்டனர்.

இந்தப் போராட்டத்தில், ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, மக்கள் கலை இலக்கியக் கழகம், தரைக்கடை வியாபாரிகள், ஆட்டோ ஓட்டுநர்கள் என 100-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இன்றைய நிகழ்ச்சிகள்

தேசிய வாழை ஆராய்ச்சி நிறுவனம்: 33-ஆவது நிறுவன நாள் விழா, உழவர் தினம் சிறப்புக் கண்காட்சி, கருத்தரங்கு, முனைவர் பாலச்சந்திர ஹெப்பர் பங்கேற்பு, நிறுவன வளாகம், தாயனூர், காலை 10.

தேசியக் கல்லூரி: அறிவியல் தின போட்டிகள் தொடக்க விழா, கல்பாக்கம் அணு ஆராய்ச்சி மையத்தின் முன்னாள் இயக்குநர் வெங்கட்ராமன் பங்கேற்பு, கல்லூரி வளாகம், காலை 10.

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை தொழிலாளர்கள் சங்கம்: இரண்டாவது மாநில மாநாடு தொடக்க விழா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் மு. வீரபாண்டியன், சுப்பராயன் எம்பி பங்கேற்பு, ஜீவன் கல்லூரி அருகில், மணப்பாறை, பிற்பகல் 3.

தூய வளனார் கல்லூரி மேல்நிலைப் பள்ளி: 183-ஆவது விளையாட்டு விழா, பள்ளி மைதானம், காலை 8.30, தூய வளனார் கல்லூரியின் ஆண்டு விளையாட்டு விழா, ஐஜி பாலகிருஷ்ணன் பங்கேற்பு, கல்லூரி மைதானம், பிற்பகல் 1.30.

இந்திராகாந்தி கல்லூரி: கணினி பயன்பாட்டுத்துறை சார்பில், தரவு அறிவியல் குறித்த சிறப்புக் கருத்தரங்கு, மென்பொறியாளர் ஹரிஷ் ராகவேந்திரா பங்கேற்பு, கல்லூரி ஆய்வகம், காலை 9.30, கல்லூரியின் உன்னத் பாரத் அபியான் அமைப்பு சார்பில், கிராமப்புற பெண் தொழில்முனைவோருக்கு வழிகாட்டி கருத்தரங்கு, முனைவர் சோமசுந்தரம் பங்கேற்பு, கல்லூரி கூட்டரங்கு, நண்பகல் 12.

திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம்: ஆகஸ்ட் மாத சொற்பொழிவு, தமிழும்- திரை இசையும் எனும் தலைப்பில் கவிஞர் சுகுணா சிறப்புரை, சங்க வளாகம், மேலரண்சாலை, மாலை 6.30.

பஞ்சாப் நேஷனல் வங்கி ...the name you can BANK upon!

SAMB சென்னை, 4வது தளம், PNB டவர்ஸ், எண்.46-49, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை - 600 014. தொலைபேசி: 044-28112261-90, மின்னஞ்சல்: ZS8341@pnb.bank.in

2002ன் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 8 மற்றும் 9ன் கீழ் அசையாச் சொத்திற்கான மின் ஏல விற்பனை குறித்து பொதுமக்களுக்கான அறிவிப்பு

**கடனீட்டுச் சொத்துக்களை சொக்கலாக்குதல், நிதிச்சொத்துகளை சீரமைத்தல், கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002ன் 8 (6) & 9(1) ன் கீழ் பஞ்சாப் நேஷனல் வங்கியிடம் அடமானத்திலுள்ள ஈடுபெற்ற அ